## 108. கயமை

1071\. *மக்களே போல்வர் கயவர் அவரன்ன*
*ஒப்பாரி யாங்கண்ட தில்*

**வடிவத்தில் மனிதர்களாக இருக்கும்**
**வகைப்பட்ட உயிரினங்களில் மட்டும் தான்**
**தோற்றத்தில் நல்லவராகக் காட்டிக் கொண்டு**
**தோண்டி எடுத்தால் உள்ளே குணத்தில்**
**தோய்ந்த கயவராக இரு வகையில் இருப்பர் !**

1072\. *நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்*
*நெஞ்சத் தவலம் இலர்*

**நல்லவை, தீயவை எதுவென**
**நன்கு ஆராய்ந்து அதைப் பற்றியே சிந்திக்கும்**
**நல்லறிஞர்கள் கொண்ட நெஞ்சம்**
**நடுங்கும் அவலத்துடன் ஒப்பிடும்போது**
**நடப்பது எதைப்பற்றியும் கவலைப்படாத**
**நச்சுக் கயவர்கள் பாக்கியசாலிகள் !**

1073\. *தேவ ரனையர் கயவர் அவருந்தாம்*
*மேவன செய்தொழுக லான்*

**தேவர்களைப் போல் மனம்**
**தேடிச் சென்றதையெல்லாம்**
**தேடாமல் அடையக்கூடிய வல்லமையைத்**
**தேர்ந்து பெற்றதால் கயவர்களும்**
**தேவர்களும் ஒன்றானவர்களே !**

1074\. *அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்*
*மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்*

**இழிவான கயவர்கள் தங்களை விட**
**இழிவான செயல்கள் செய்பவரைக் கண்டால்**
**இங்கே நாம் அவர்களைவிட மேன்மையானவர்கள் என**
**இறுமாப்புக் கொள்வர் !**

1075\. *அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்*
*அவாவுண்டேல் உண்டாம் சிறிது*

**அச்சத்தின் காரணமாக மட்டுமே**
**அயோக்கியர்கள் ஒழுக்கமாக நடப்பார்கள் !**
**அதைத்தவிர ஒரு பொருளின் மீது உள்ள**
**அதீத ஆசையால் சிறிது ஒழுக்கமாக நடப்பார்கள் !**

*1076. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்*

**சொல்லக் கூடாது என்று சொல்லிய
சொற்ப இரகசியங்களைக் கூட
சொல்வதற்கு வலியப் போய் மற்றவர்களுக்குச்
சொல்லி மகிழ்கிற கயமைக் குணத்தை
சொல்லி அடிக்கும் பறைக்கு ஒப்பிடலாம் !**

*1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கையர் அல்லா தவர்க்கு*

**கயவர்கள் எப்போதும் கை மடக்கித் தங்கள்
கன்னத்தில் அறைபவர்களுக்கு மட்டுமே
கையாலாகாமல் ஈவார்களே தவிர மற்றவர்களுக்கு எச்சில்
கையால் கூட உதவிட மாட்டார்கள் !**

*1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல
கொல்லப் பயன்படும் கீழ்*

**சொன்னாலே போதும் நல்லவர்கள்
சொன்ன குறை போக்கப் பயன்படுவார்கள் !
கயவர்கள் மட்டும் கதறினாலும்
கரும்பைக் கசக்கிப் பிழிவதைப் போல்
கடினப்படுத்தினால் தான் பயன்படுவார்கள் !**

*1079. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்*

**உடுப்பதையும் உண்பதையும் கூட பார்த்து
உள்ளத்தால் பொறாமை கொள்ளும் கயவன்
உறுத்தும்படி வேண்டுமென்றே குற்றம் சொல்வான் !**

*1080. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து*

**எதற்கு உரியவர் கயவர் என்றால்
எப்படியும் தனக்கு வரும் துன்பத்திலிருந்து மீள
எதிர்பாராமல் விரைந்து தம்மையே
எதிரிக்கு விற்று விடுவர் !**